
# பத்திரிகைச் செய்தி வெளியீடு

## 2014ம் ஆண்டுக்கான காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் செயலாற்றுகை

**மொத்த காப்புறுதிக் கட்டுப்பணம் (GWP)**

நீண்ட கால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் எனும் இரு துறைகளும், காப்புறுதி கம்பனிகளின் சொத்துக்களுடன் சேர்த்து மொத்தக் காப்புறுதிக் கட்டுப்பண (GWP) வளர்ச்சியினைப் பதிவுசெய்ததனால், 2014ம் ஆண்டு இலங்கை காப்புறுதி கைத்தொழிற்துறைக்கு மேலுமொரு சிறப்பான ஆண்டாக அமைந்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் காப்புறுதிக் கம்பனிகளினால் உழைக்கப்பட்ட மொத்தக் காப்புறுதிக் கட்டுப்பணம் (GWP) 5.14% வீத வளர்ச்சியையும் மொத்த சொத்துக்கள் 13.81% வீத வளர்ச்சியையும் அடைந்துள்ளது.


2014ம் ஆண்டு நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்கள் மொத்தக் காப்புறுதிக் கட்டுப்பண (GWP) வருமானமாக ரூபா 99,872 மில்லியனைப் பெற்றுக்கொண்டதுடன், இது 2013ம் ஆண்டு பெறப்பட்ட ரூபா 94,987 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 5.14% வீத வளர்ச்சியை பிரதிபலிக்கின்றது. பொதுக் காப்புறுதி வியாபாரம் காப்புறுதிக் கட்டுப்பண வருமானமாக ரூபா 55,262 மில்லியனை 2014ம் ஆண்டு (2013: ரூபா 53,311 மில்லியன்) பெற்றுக்கொண்ட போது, நீண்ட கால காப்புறுதி வியாபாரம் காப்புறுதிக் கட்டுப்பண வருமானமாக ரூபா 44,610 மில்லியனை (2013: ரூபா 41,676 மில்லியன்) பெற்றுக்கொண்டது. அத்துடன் நீண்ட கால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் என்பன 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு முறையே 7.04% மற்றும் 3.66% வீத மொத்தக் காப்புறுதிக் கட்டுப்பண வருமான வளர்ச்சியினை வெளிப்படுத்தியுள்ளது.




**மொத்த சொத்துக்கள்**

காப்புறுதிக் கம்பனிகள் வைத்திருக்கும் சொத்துக்களின் பெறுமதி 31 டிசம்பர் 2014ம் திகதியில் ரூபா 406,827 மில்லியனாக இருந்ததுடன், இது 2013ம் ஆண்டு கம்பனிகள் வைத்திருந்த ரூபா 357,465 மில்லியன் சொத்துக்களுடன் ஒப்பிடுகையில் 13.81% வீத வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றது. இதே வருடம் நீண்ட கால

காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்களின் பெறுமதி ரூபா 249,850 மில்லியனாக (2013: ரூபா 216,275 மில்லியன்) இருக்கையில், பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்களின் பெறுமதி ரூபா 163,834 மில்லியனாக (2013: ரூபா 148,410 மில்லியன்) இருந்ததுடன், இவையிரண்டும் முறையே 15.52% மற்றும் 10.39% வீத வளர்ச்சியினை வெளிப்படுத்தியுள்ளது.




**அரச பிணையங்களில் முதலீடு**

2014ம் ஆண்டின் இறுதியில், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த சொத்துக்களில் ரூபா 111,600 மில்லியனை அரச கடன் பிணையங்களில் முதலீடு செய்ததுடன், இது 44.67% வீதமாகும் (2013: ரூபா 93,539 மில்லியன்: 43.25%), அதேவேளை பொதுக் காப்புறுதி வியாபாரம் அதன் மொத்தச் சொத்துக்களில் ரூபா 25,496 மில்லியனை அரச கடன் பிணையங்களில் முதலீடு செய்ததுடன் இது 15.56% வீதமாகும் (2013: ரூபா 28,163 மில்லியன்: 18.98%). இதன்படி. நீண்ட கால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் என்னும் இரண்டும் 31 டிசம்பர் 2014ம் திகதியில் மொத்தமாக ரூபா 137,096 மில்லியனை (2013: ரூபா 121,702 மில்லியன்) அரச கடன் பிணையங்களில் முதலீடு செய்துள்ளது.

**முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் விசாரணைகள்**

இலங்கை காப்புறுதி சபையின் பிரதான குறிக்கோளான காப்புறுதி பூட்கையாளர்களைப் பாதுகாத்தல் என்பதற்கமைவாக, ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதிக் கொள்கைகளின் கீழ் காப்புறுதி கோரிக்கைகள் தொடர்பாக எழுந்துள்ள காப்புறுதி பூட்கையாளர்களின் காப்புறுதிக் கோரிக்கைகள் மற்றும் முகவர்களின் தகைமைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்கின்றது. 2000ம் ஆண்டு 43ம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறையை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 98ம் பிரிவுக்கு அமைவாக, இலங்கை காப்புறுதிச் சபைக்கு காப்புறுதி பூட்கையாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள, காப்புறுதி முகவர் மற்றும் காப்புறுதி பூட்கையாளர் இருவருக்கிடையிலான முரண்பாட்டினைத் தீர்த்து வைப்பதற்கு அவசியமான விசாரணைகளை மேற்கொள்வதற்கான அதிகாரம் இலங்கை காப்புறுதிச் சபைக்கு வழங்கப்பட்டள்ளது. 2014ம் ஆண்டு 284 புதிய விடயங்கள் இலங்கை காப்புறுதிச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2013 மற்றும் 2014ம் ஆண்களில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 230 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டது/ முடிவுறுத்தப்பட்டது. தீர்க்கப்பட்ட

விடயங்களில் இலங்கை காப்புறுதிச் சபையின் தலையீடு காரணமாக 38 கோரிக்கைகள் காப்புறுதி முகவர்களினால் வழங்கப்பட்டது.

**காப்புறுதி முகவர்கள்**

31 டிசம்பர் 2014ம் திகதி செயற்பட்ட இருபத்தியொரு (21) காப்புறுதிக் கம்பனிகளில் (காப்புறுதி முகவர்கள்) பன்னிரெண்டு (12) கம்பனிகள் இணைந்த கம்பனிகளாவதுடன் ( இவை பொது மற்றும் நீண்ட கால காப்புறுதி வியாபாரங்கள் எனும் இரண்டினையும் ஒருங்கே மேற்கொள்ளும் வியாபாரங்கள்), ஆறு (6) கம்பனிகள் பொது காப்புறுதி வியாபாரத்தையும் மூன்று (3) கம்பனிகள் மட்டும் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்ளுகின்றன.

**காப்புறுதித் தரகு**

2014ம் ஆண்டில், ஐம்பத்தியொன்பது (59) காப்புறுதித் தரகுக் கம்பனிகள் சந்தையில் செயற்பட்டன. சட்டத்தின் 82ம் பிரிவுக்கு அமைவாக காப்புறுதித் தரகு வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு காப்புறுதி தரகுக் கம்பனிகள் இலங்கை காப்புறுதிச் சபையில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும். கடந்த வருடத்தைப் போல் இவ்வருடமும் காப்புறுதி தரகு நடவடிக்கைகள் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் குறிப்பிடத்தக்களவில் பங்களிப்பை வழங்கியுள்ளது. எனினும், பொதுக் காப்புறுதிச் சந்தையில் இடைத்தரகராக செயற்படும் தரகுக் கம்பனிகளின் முக்கியத்துவத்தை பொது காப்புறுதி வியாபாரத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட காப்புறுதிக் கட்டுப்பண வருமானம் எடுத்துக்காட்டுகின்றது.

பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாக காப்புறுதி தரகுக் கம்பனிகள் ரூபா 14,559 மில்லியன் (2013: ரூபா 14,189 மில்லியன்) காப்புறுதிக் கட்டுப்பண வருமானத்தை உழைத்துக்கொண்டதுடன் நீண்ட காலக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாக இவை ரூபா 158 மில்லியன் (2013: ரூபா 191 மில்லியன்) காப்புறுதிக் கட்டுப்பண வருமானத்தைப் பெற்றுக்கொண்டன. 2014ம் ஆண்டு காப்புறுதித் தரகுக் கம்பனிகள் பொதுக் காப்புறுதி வியாபாரம் மற்றும் நீண்ட கால வியாபாரம் என்பவற்றின் ஊடாக ரூபா 14,716 மில்லியன் வருமானத்தை பெற்றுக்கொண்டதுடன், இதே வியாபாரம் தொடர்பாக கடந்த வருடம் ரூபா 14,380 மில்லியனை உழைத்துக்கொண்டுள்ளது. 2014ம் ஆண்டைக் கடந்த வருடமான 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.34 வீத வளர்ச்சியினை காப்புறுதி தரகர் வியாபாரம் வெளிப்படுத்துகின்றது.

குறிப்பு:

1. 2014 எண் தொகைகள் – தற்காலிகமானது
2. 2013 எண் தொகைகள் – சீர்திருத்தப்பட்ட கணக்காய்வு
3. மேற்குறிப்பிட்ட ஆய்வில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை, இதுவரை அவசியமான தகவல்கள் இலங்கை காப்புறுதிச் சபைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.
4. காப்புறுதிக் கம்பனிகளின் பொது காப்புறுதி வியாபாரத்தின காப்புறுதிக் கட்டுப்பண வருமானத்தில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் வேலை நிறுத்தம், கலவரம், குடிமக்கள் கிளர்ச்சி மற்றும் பயங்கரவாதம் (SRCC & T) என்பவற்றுக்கான காப்புறுதிக் கட்டுப்பண வருமானம் கருத்தில்கொள்ளப்படவில்லை.
5. 2014ம் ஆண்டுக்காக ரூபா 6,857 மில்லியன் மற்றும் 2013ம் ஆண்டுக்காக ரூபா 7,220 மில்லியன் இடைக்கால மீதி (அதாவது நீண்ட கால காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதிப் பகுதிகளுக்கிடையிலான பரிமாற்றம்) அகற்றப்பட்டது.


## இலங்கை காப்புறுதி சபை

11வது மாடி, கிழக்கு கோபுரம்

உலக வர்த்தக மையம்

கொழும்பு 01.

| | |
|---|---|
| இணையத்தளம்:WWW.ibsl.gov.lk | மின்னஞ்சல்: info@ibsl.gov.lk |
| தொலைபேசி: 011 2396184 - 4 | தொலைநகல்: 0112396190 |


**09/09/2015**